**சார்பு நீதிமன்றம், அவிநாசி,**
**முன்னிலை: திரு.C.செந்தில்குமார், B.Com.,B,L.,**
**சார்பு நீதிபதி, அவிநாசி.**

2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 17–ஆம் நாள், திங்கள்கிழமை

**இ.நி.ம.எண்.04/2025**
**in**
**அ.வ.எண்.36/2025**

1.ஈஸ்வரன்
2.முத்துசாமி .. மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

//எதிர்//

சத்தியமூர்த்தி .. எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 12.01.2026–ஆம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.E.P.இளவரசு** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.P.விஜய ஆனந்தன்** அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனு மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் அ.வ.எண்.36/2025 வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11(d) சிபிசி–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:–**

**2.1.** அசல் வழக்கானது செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. வாதி தூய கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை,

அதற்கு மாறாக அரசியல் ஆதாயத்திற்காக வேண்டி தவறான, பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார். பல தலைமுறைகளாக மூதாதையர்கள் அவிநாசியை சுற்றியுள்ள பல கோவில்களின் பக்தர்களாக இருந்து நன்கொடைகளை கொடுத்து பராமரித்து வருகிறார். அதேபோல், ஆகாசராயர் கோவிலுக்கும் நன்கொடைகளை கொடுத்து பராமரித்து வந்தார்கள். அவர்களை தொடர்ந்து 1,2 பிரதிவாதிகளும் நன்கொடைகளை கொண்டு சிறப்பாக கோவில்களை பராமரித்து வருகிறார்கள். அந்த வகையில் ஆகாசராயர் கோவிலுக்கு கும்பாபிஷேம் நடத்த இருப்பதால் 1,2 பிரதிவாதிகள் பங்களிப்பு செய்து கோவிலின் பராமரிப்பு வேலைகளை இந்து அறநிலையத்துறையின் மேற்பார்வையில் செய்து வரப்பெற்றது. அந்த அறநிலையத்துறை அந்த கோவிலின் பக்தர்கள், உள்ளூர் குடியிருப்பு வாசிகள் மற்றும் பூசாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க கோவிலின் கும்பாபிஷேகத்திற்காக வேண்டி பராமரிப்பு வேலை செய்யப்பட்டது. இந்த நிலையில், வாதி தனது வழக்கில் கோரியுள்ளது போல பராமரிப்பு வேலைகளை இப்படி தான் செய்ய வேண்டும் என்ற விதிமுறை கிடையாது. 1,2 பிரதிவாதிகள் இந்துசமய அறநிலையத்துறையின் உத்தரவிற்கிணங்க தான் கோவில் கும்பாபிஷேகத்திற்காக வேண்டி கோவிலின் வழிபாட்டாளர்கள் என்ற முறையில் செயல்பட்டு வருகிறார்கள். அதனால், வாதி இந்த வழக்கில் கோரிய பரிகாரத்தின்படி ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானங்களை இடிக்க 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அதனால், வாதி கோவிலின் பல கட்டுமானங்களை இடிக்க உத்தரவிடக்கோரிய வாதியின் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

**2.2.** உண்மையில், சிமெண்ட் இல்லாத காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாக கற்கள் மற்றும் மண்ணை கொண்டு கட்டப்பட்டிருந்த பழைய சுற்று சுவரானது சிதிலமடைந்து விட்ட நிலையில், பக்தகள் மற்றம் பொதுமக்களின்

பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சிதிலமடைந்த சுற்று சுவரை இடித்து விட்டு செங்கல் கொண்டு இந்து அறநிலையத்துறையின் உத்தரவிற்கிணங்க புதிய சுற்று சுவர் கட்டப்பட்டது. வாதி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களில் 3 மண்டபங்கள் அந்த கோவிலின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. அந்த மண்டபங்களை பக்தர்களும், பொதுமக்களும் ஆகாசராயர் கோவில் சமய சடங்குகள் கொண்ட விழாக்களை நடத்தி வருவார்கள். அப்போது ஆடு மற்றும் கோழிகளை பலியிட்டு சமைத்து வழிபாடு செய்வது வழக்கம். அப்போது ஒவ்வொரு மண்டபத்திலும் சமையல் செய்வதற்காக சமையலறை உள்ளது. அவ்வாறு சமையல் செய்து மண்டபத்தின் உள்ளே வைத்து சாப்பாடு பரிமாறி சாப்பிட்டு விட்டு செல்வார்கள். அப்போது கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாமல் கவனக்குறைவாக விட்டுச்சென்று விடுவார்கள். அதனால், ஆட்டின் எலும்புகள் மற்றும் வேறு உணவுகளை கோவில் அருகில் எறிந்து விட்டு செல்வதினால் நாய்கள் உள்ளே வந்து சாப்பிடும் போது சண்டையிடுவதினால் குழந்தைகளும், பக்தர்களும் மற்றும் பொதுமக்களும் கோவிலுக்கு வருவதற்கு சிரமமாக உள்ளது. அதனால், சுகாதரமற்ற சூழ்நிலை ஏற்பட்டு கொடிய நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் தான், பக்தர்களும், பொது மக்களும் அறநிலையத்துறையிடம் வைத்த வேண்டுகோளுக்கிணங்க தான் இந்து அறநிலையத்துறையினர் பக்தர்கள் மற்றும் பொது மக்கள் அர்ச்சகர்கள் ஆகியோர்களுடன் சேர்ந்து முடிவு செய்து தான் கோவிலின் மண்டபங்களை தனியாக பிரிக்கும் வகையில் பழைய சுற்று சுவர் கட்டப்பட்டது. அவ்வாறு கட்டப்பட்ட சுற்று சுவர் மண்டபங்களுக்கு செல்வதை எந்த இடத்திலும் தடுக்கப்படவில்லை, மண்டபங்களுக்கு செல்ல போதிய இடம் உள்ளது. அந்த மண்டபங்களுக்கு தேவையான போது தீயணைப்பு வாகனம் செல்வதற்கு போதுமான இடமும் இடப்பட்டுள்ளது. அந்த சுற்று சுவரின் உயரமானது கோவிலின் விமானத்தை மறைக்கவில்லை. அந்த சுற்று சுவர்

நல்ல பாதுகாப்புடன் தான் கட்டப்பட்டுள்ளது. அதனால், வாதி தவறான, பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி கோவிலுக்கு அருகில் உள்ள ராயல் காலனியில் வசித்து வரும் நிலையில், கடந்த 6 மாதங்களுக்கு மேலாக சிதிலமடைந்த சுற்று சுவரை இடித்து விட்டு புதிய சுற்று சுவர் கட்டப்பட்டுள்ள விவரம் வாதிக்கு நன்கு தெரியும்.

**2.3.** அதேபோல், வழக்கறிஞராக தொழில் செய்து வரும் வாதிக்கு சட்டப்படியான விதிமுறைகள் தெரியும். வாதிக்கு உண்மையிலேயே கோவில் மீது பற்று இருக்கும் பட்சத்தில் இந்து அறநிலையத்துறை இணை ஆணையரிடம் முறையாக மனு கொடுத்து தனது ஆட்சேபணையை தெரிவித்திருப்பார். அவ்வாறு கொடுத்த மனுவின் பேரில் இணை ஆணையர் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் அந்த உத்தரவின் பேரில் வாதி உரிமையியல் வழக்கை தாக்கல் செய்ய முடியும். ஆனால், இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் பிறப்பிக்கக்கூடிய உத்தரவை வாதி இந்த நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்காக தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ள வாதியின் இந்த வழக்கு இந்து அறநிலையத்துறை சட்டத்தின் படி தடைசெய்யப்பட்டுள்ளது. அதனால், வாதியின் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. அரசியல் ஆதாயத்திற்காக வேண்டி தான் அடிப்படை ஆதாரமற்ற பொய்யான சங்கதிகளை வாதி தனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார். மேலும், ஆகாசராயர் திருக்கோவிலை வேண்டுமென்றே சைவ திருக்கோவில் என்று கோவிலின் தல வரலாறு தெரியாமல் புதிய கதையை 3-ம் பிரதிவாதி சொல்வதாக வாதி வழக்குரையில் சொல்லியுள்ளது தவறு. அந்த கோவிலின் வழிபாட்டு முறையை இந்து அறநிலையத்துறை எப்போதும் மாற்ற முயற்சித்தது கிடையாது. வாதியின் வழக்குரையில் இருந்து வாதி இந்த வழக்கை அவரது தனிப்பட்ட ஆதாயத்திற்காக வேண்டி தான் தாக்கல் செய்துள்ளார். பொது மக்களின் உரிமைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பது

தெள்ளத்தெளிவாகிறது. அதேபோல், அரசியல் ஆதாயத்திற்காக வேண்டி தான் வாதி தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே கோவில் பூசாரியான செல்வகுமார் என்பவர் சார்பாக வாதி வழக்கறிஞராக இருந்து கோவிலின் செயல் அலுவலருக்கு சட்ட அறிவிப்பை அனுப்பியுள்ளார். மேற்படி விபரத்தை வாதி வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லாமல் மறைத்துள்ளார். வாதி வழக்கை முறையாக மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால், வாதியின் அசல் வழக்கின் வழக்குரையை ரத்து செய்ய வேண்டியது அவசியம் ஆகும். அதனால், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11(d) சிபிசி படி தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதியின் எதிருரையின் சுருக்கம்</u>:-

மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது, பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும். வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்று மனுவில் சொல்லியுள்ளது தவறு, அதைப்பொறுத்து வழக்குரையில் 7,8,9 பாராக்களில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதேபோல், வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளதா என்பதை பொறுத்து அசல் வழக்கின் விசாரணையின் முடிவில் தான் நீதிமன்றம் முடிவிற்கு வர முடியும். வாதி நீதிமன்றத்தின் நடைமுறையை தவறாக பயன்படுத்தி தவறான பரிகாரத்தை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பாரா 4-ல் சொல்லியுள்ளது தவறு. கட்டிட பராமரிப்பு வேலையானது இந்து அறநிலையத்துறையின் அறிவுறுத்தலின் படி தான் நடைபெற்று வருவதாக சொல்லியுள்ளது தவறு. 3 மற்றும் 7 பிரதிவாதிகள் சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் கோவிலின் நலன் மற்றும் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் பிரச்சனைக்குரிய சுற்று

சுவரை மண்டபங்களுக்கு செல்லாமல் தடைசெய்யும் வகையில் 1,2 பிரதவாதிகள் கட்டியுள்ளார்கள். வாதி உள்பட பொது மக்களின் உரிமைக்காக தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை இடிப்பதற்கு 1,2 பிரதிவாதிகளுக்கு முடிவெடுக்கும் உரிமை கிடையாது என்பதை ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், வாதி 3–ம் பிரதிவாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து தான் சட்ட விரோதமாக கட்டுமானத்தை ஏற்படுத்தியுள்ளதை அப்புறப்படுத்தக்கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அதனால், மனுதாரகள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் கிடையாது. மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் நன்கொடைதாரர்கள் என்று அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ளது. 3 மற்றும் 7 பிரதிவாதிகளை பொறுத்து மனு அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ளதிலிருந்தே அவர்கள் கூட்டாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதை காட்டுகிறது. மனு அபிடவிட்டில் மனுதாரர்கள் பழைய சிதிலமடைந்த காம்பவுண்டு சுவரை இடித்து விட்டு புதிதாக காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டதாக சொல்லியுள்ளார்கள். ஆனால், அவ்வாறு காம்பவுண்டு சுவர் கட்டப்படவில்லை. மனுதார்கள் / 1,2 பிரதிவாதிகள் தங்களது மனு அபிடவிட்டில் புதிதாக கட்டப்பட்ட சுற்று சுவர் மண்டபங்களுக்கு செல்வதை தடைசெய்யவில்லை என்றும், அந்த மண்டபங்களுக்கு தீயணைப்பு வாகனம் செல்ல முடியும் என்றும் சொல்லியுள்ளதை பொறுத்து அசல் வழக்கின் விசாரணை மூலமாக தான் தெரிய வரும். அதைப்பொறுத்து வாதி அசல் வழக்கின் விசாரணையில் உரிய சாட்சியங்களை ஆஜர் செய்ய உள்ளார். மனு அபிடவிட்டில் எந்தவொரு சட்டப்பிரிவும் குறிப்பிடாமல் வாதியின் வழக்கை விசாரிக்க தடை செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல. வாதிக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது. செல்வகுமார் என்ற பூசாரிக்காக வேண்டி அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளது அது வேறு பிரச்சனை குறித்தது, அதற்கு இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை. அந்த பிரச்சனையை வைத்து

கொண்டு வாதி தனது தனிப்பட்ட ஆதயாத்திற்காக இந்த வழக்கை பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளது தவறு. இந்து அறநிலையத்துறை சட்டத்தின் படி மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்து அறநிலையத்துறை அதிகாரியிடம் தாங்கள் எந்த உரிமையும் கோரமாட்டோம் என்றும், சலுகை அல்லது மீட்புகை / பங்களிப்பு ரத்து செய்யப்படுவதையும், கட்டமைப்புகளை இடிக்க வேண்டியிருந்தாலும் அதை தடுக்க மாட்டோம் என்று ஒரு பிரமாண வாக்குமூலத்தை எழுதி கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள். அதனால், வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது. அதேபோல் வாதி முறையாக தான் இந்த வழக்கை தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ளார். அதனால் மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. <u>பிரச்சனை</u>:–

மனுதாரர்கள் /1,2 பிரதிவாதிகளின் இந்த அன்டர் ஆர்டர் 7 ரூல் 11 (a) மற்றும் 11 (d) சிபிசி படியான இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதை பொறுத்து தான் இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

5. <u>தீர்வு</u>:–

**5.1.** இந்த மனு மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கான அ.வ.எண்.36/2025 வழக்கின் வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11(d) சிபிசி–ன் படி தாக்கல் செய்துள்ளார்கள். இந்த மனுவை தாக்கல் செய்ய முக்கிய காரணமாக மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தங்களது மனு அபிடவிட்டில், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் மூதாதையர்கள் பல தலைமுறைகளாக அவிநாசியை சுற்றியுள்ள பல

கோவில்களின் பக்தர்களாக இருந்து நன்கொடைகளை கொடுத்து பராமரித்து வந்ததாகவும், அதேபோல், ஆகாசராயர் கோவிலுக்கும் நன்கொடைகளை கொடுத்து பராமரித்து வந்ததாகவும், அவர்களை தொடர்ந்து 1,2 பிரதிவாதிகளும் நன்கொடைகளை கொண்டு சிறப்பாக கோவில்களை பராமரித்து வருவதாகவும், அந்த வகையில் ஆகாசராயர் கோவிலுக்கு கும்பாபிஷேம் நடத்த இருப்பதால் 1,2 பிரதிவாதிகள் பங்களிப்பு செய்து கோவிலின் பராமரிப்பு வேலைகளை இந்து அறநிலையத்துறையின் மேற்பார்வையில் செய்து வந்ததாகவும், அந்த அறநிலையத்துறை அந்த கோவிலின் பக்தர்கள், உள்ளூர் குடியிருப்பு வாசிகள் மற்றும் பூசாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க கோவிலின் கும்பாபிஷேகத்திற்காக வேண்டி பராமரிப்பு வேலை செய்யப்பட்டதாகவும், இந்த நிலையில், வாதி தனது வழக்கில் கோரியுள்ளது போல பராமரிப்பு வேலைகளை இப்படி தான் செய்ய வேண்டும் என்ற விதிமுறை எதுவும் கிடையாது என்றும், ஆனால், 1,2 பிரதிவாதிகள் இந்துசமய அறநிலையத்துறையின் உத்தரவிற்கிணங்க தான் கோவில் கும்பாபிஷேகத்திற்காக வேண்டி கோவிலின் வழிபாட்டாளர்கள் என்ற முறையில் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், அதனால், வாதி இந்த வழக்கில் கோரிய பரிகாரத்தின்படி ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானங்களை இடிக்க 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என்றும், அதனால், வாதி கோவிலின் பல கட்டுமானங்களை இடிக்க உத்தரவிடக்கோரிய வாதியின் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், அதேபோல், சிமெண்ட் இல்லாத அந்த காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாக கற்கள் மற்றும் மண்ணை கொண்டு கட்டப்பட்டிருந்த பழைய சுற்று சுவரானது சிதிலமடைந்து விட்ட நிலையில், பக்தகள் மற்றம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சிதிலமடைந்த சுற்று சுவரை இடித்து விட்டு செங்கல் கொண்டு இந்து அறநிலையத்துறையின் உத்தரவிற்கிணங்க புதிய சுற்று சுவர்

கட்டப்பட்டதாகவும், வாதி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களில் 3 மண்டபங்கள் அந்த கோவிலின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளதாகவும், அந்த மண்டபங்களை பக்தர்களும், பொதுமக்களும் ஆகாசராயர் கோவில் சமய சடங்குகள் கொண்ட விழாக்களை நடத்தி வருவதாகவும், அப்போது ஆடு மற்றும் கோழிகளை பலியிட்டு சமைத்து வழிபாடு செய்வது வழக்கமாக கொண்டுள்ளதாகவும், அப்போது அந்த மண்டபங்களில் உள்ள சமையலறையில் சமையல் செய்து மண்டபத்தின் உள்ளே வைத்து சாப்பாடு பரிமாறி சாப்பிட்டு விட்டு செல்லும் போது கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாமல் கவனக்குறைவாக விட்டுச்சென்று விடுவார்கள் என்றும், அதனால், ஆட்டின் எலும்புகள் மற்றும் வேறு உணவுகளை கோவில் அருகில் எறிந்து விட்டு செல்வதினால் நாய்கள் உள்ளே வந்து சாப்பிடும் போது சண்டையிடுவதினால் குழந்தைகளும், பக்தர்களும் மற்றும் பொதுமக்களும் கோவிலுக்கு வருவதற்கு சிரமமாக இருந்ததாகவும், அதனால், சுகாதரமற்ற சூழ்நிலை ஏற்பட்டு கொடிய நோய்கள் ஏற்பட வாய்ப்பு இருந்ததால் தான், பக்தர்களும், பொது மக்களும் அறநிலையத்துறையிடம் வைத்த வேண்டுகோளுக்கிணங்க தான் இந்து அறநிலையத்துறையினர் பக்தர்கள் மற்றும் பொது மக்கள் அர்ச்சகர்கள் ஆகியோர்களுடன் சேர்ந்து முடிவு செய்து தான் கோவிலின் மண்டபங்களை தனியாக பிரிக்கும் வகையில் பழைய சுற்று சுவர் கட்டப்பட்டதாகவும், அவ்வாறு கட்டப்பட்ட சுற்று சுவர் மண்டபங்களுக்கு செல்வதை எந்த இடத்திலும் தடுக்கப்படவில்லை, மண்டபங்களுக்கு செல்ல போதிய இடம் விட்டு விட்டு தான் சுவர் கட்டப்பட்டதாகவும், அந்த மண்டபங்களுக்கு தேவையானபோது தீயணைப்பு வாகனம் செல்வதற்கு போதுமான இடமும் விடப்பட்டுள்ளது என்றும், அந்த சுற்று சுவரின் உயரமானது கோவிலின் விமானத்தை மறைக்கவில்லை என்றும், அந்த சுற்று சுவர் நல்ல பாதுகாப்புடன் தான் கட்டப்பட்டுள்ளது என்றும், அதனால், வாதி தவறான,

பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி கோவிலுக்கு அருகில் உள்ள ராயல் காலனியில் வசித்து வரும் நிலையில், கடந்த 6 மாதங்களுக்கு மேலாக சிதிலமடைந்த சுற்று சுவரை இடித்து விட்டு புதிய சுற்று சுவர் கட்டப்பட்டுள்ள விவரம் வாதிக்கு நன்கு தெரியும் என்றும், இருந்தும் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதிக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்து அறநிலையத்துறையில் இணை ஆணையரிடம் உரிய மனுவை கொடுத்து அந்த மனுவின் மீது பிறப்பித்த உத்தரவின் பேரில் தான் வாதி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ய முடியும் என்றும், ஆனால் வாதி அவ்வாறு இந்து அறநிலையத்துறையின் சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் நேரடியாக பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால், வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், அதேபோல், இந்து அறநிலையத்துறை சட்டத்தின் படி வாதியின் வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும், அதனால், அ.வ.எண்.36/2025 வழக்கின் வழக்குரையை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**5.2.** இதற்கு மாறான வகையில் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் இந்த மனுவை ஆட்சேபித்து எதிருரை தாக்கல் செய்து, அதில் மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுதாரர் / 1,2 பிரதிவாதிகளின் மனு அபிடவிட்டிலிருந்து 3–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து தான் சட்டத்திற்கு புறம்பான வகையில் கோயில் ஆகம விதிகளுக்கு மாறாக சுற்று சுவரை கட்டியுள்ளார்கள் என்றும், அந்த சுற்று சுவரானது ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களுக்கு பக்தர்களும், பொது மக்களும் விழாவின் போது சாதாரணமாக

செல்ல முடியாத வகையில் கட்டப்பட்டுள்ளது என்றும், தேவைப்படும் போது தீயணைப்பு வாகனம் கூட செல்ல முடியாத அளவில் இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும், அந்த திருக்கோவிலில் பக்தர்கள் மற்றும் பொது மக்களின் உரிமைக்காக வேண்டியும், வாதிக்கு அந்த கோவில் குல தெய்வ கோவிலாக இருந்து வழிபட்டு வரும் நிலையில் தான் 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து 3–ம் பிரதிவாதி கட்டி வரும் அஸ்திவாரமற்ற, பாதுகாப்பில்லாத கட்டுமானங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றி கொடுக்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால், வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளது என்றும், வாதியின் இந்த வழக்கானது எந்த சட்டத்தினாலும் தடைசெய்யப்படவில்லை என்றும், அதனால் வாதியின் அசல் வழக்கின் பிராதுவை நிராகரித்து உத்தரவிடக்கோரிய மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர் / வாதி தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**5.3.** இந்நிலையில், இந்த அசல் வழக்கு கோப்பை கவனாக பரிசீலித்து பார்க்கும் பொழுது எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கை தாவா சொத்தில் உள்ள ஆகாசராயர் கோவிலில் 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து 3–ம் பிரதிவாதி கட்டி வரும் அஸ்திவாரமற்ற, பாதுகாப்பில்லாத கட்டுமானங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றி கொடுக்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளாார். ஆனால், திருப்பூர் ஆட்சித்தலைவர், வருவாய் கோட்டாச்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் ஆகியோர்களான 4 முதல் 6 பிரதிவாதிகள் மற்றும் இந்து அறநிலையத்துறை திருப்பூர் இணை ஆணையர் 7–ம் பிரதிவாதியாகவும் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் வாதியின் வழக்கை ஆட்சேபித்து 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்துள்ளார்கள். ஆனால், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கிற்கு வழக்கு மூலமே கிடையாது மற்றும் இந்து அறநிலையத்துறை சட்டத்தின் படி வாதியின் வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும், அதனால், அ.வ.எண்.36/2025 வழக்கின் வழக்குரையை நிராகரித்து உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவை அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11 (d) சிபிசி படி தாக்கல் செய்துள்ளார்கள்.

**5.4.** இந்நிலையில், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவில் கோரியபடி வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளதா? என்பதை பொறுத்து வாதியின் அசல் வழக்குரையியை கவனமாக பரிசீலித்து பார்க்கும் பொழுது, 3–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து தான் சட்டத்திற்கு புறம்பான வகையில் ஆகாசராயர் கோவிலில் கோயில் ஆகம விதிகளுக்கு மாறாக சுற்று சுவரை கட்டியுள்ளார்கள் என்றும், அந்த சுற்று சுவரானது ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களுக்கு பக்தர்களும், பொது மக்களும் விழாவின் போது சாதாரணமாக செல்ல முடியாத வகையில் கட்டப்பட்டுள்ளது என்றும், தேவைப்படும் போது தீயணைப்பு வாகனம் கூட செல்ல முடியாத அளவில் இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும், அந்த திருக்கோவிலில் பக்தர்கள் மற்றும் பொது மக்களின் உரிமைக்காக வேண்டியும், வாதிக்கு அந்த கோவில் குல தெய்வ கோவிலாக இருந்து வழிபட்டு வரும் நிலையில் தான் 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து 3–ம் பிரதிவாதி கட்டி வரும் அஸ்திவாரமற்ற, பாதுகாப்பில்லாத கட்டுமானங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றி கொடுக்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதேபோல், வாதியின் இந்த வழக்கில் கோரும் பரிகாரத்திற்காக வேண்டி ரூ.3,00,000/– வழக்கு மதிப்பாக குறிப்பிட்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் 1935, பிரிவு 27(C)–ன் படி மதிப்பீடு செய்து

ரூ.9,000/- நீதிமன்ற கட்டணமாக வாதி செலுத்தியுள்ளார் என்பதும் இந்த வழக்குரையை பரிசீலித்த வகையிலும் தெரிய வருகிறது.

**5.5.** இந்நிலையில், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் தங்களது மனு அபிடவிட்டில் சொல்லியுள்ளது போல ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களில் பக்தர்களும், ஊர் பொதுமக்களும் சமய சடங்குகள் மற்றும் திருவிழாக்களின் போது சமையல் செய்து சாப்பிட்டு விட்டு செல்லும் போது அங்கு போட்டு விட்டு செல்லும் உணவுகள், கழிவுகள், மாமிச எலும்புகளை சாப்பிடுவதற்காக வரும் தெரு நாய்கள் சண்டையிட்டு வருவதால் குழந்தைகளுக்கும், பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதாலும், அதேபோல் சுகாதார சீர் கேடு ஏற்படுவதாலும், பக்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க தான் இந்து அறநிலையத்துறையின் தாவா கோவிலின் செயல் அலுவலரான 3-ம் பிரதிவாதியின் செயலுறுத்தலின் பேரில்தான் காம்பவுண்டு சுவர் கட்டடப்பட்டது என்றும், அந்த காம்பவுண்டு சுவர் அந்த மண்டபங்களுக்கு தீயணைப்பு வாகனம் செல்ல போதுமான இடைவெளி விட்டு தான் கட்டப்பட்டுள்ளது என்றும், அதனால், அந்த சுற்று சுவர் சட்டத்திற்கு புறம்பான வகையில் கோயில் ஆகம விதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாக தனது வழக்குரையில் சொல்லியுள்ளது பொய் என்றும், அதேபோல், அந்த சுற்று சுவரானது ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களுக்கு பக்தர்களும், பொது மக்களும் விழாவின் போது சாதாரணமாக செல்ல முடியாத வகையில் கட்டப்பட்டுள்ளது என்றும், தேவைப்படும் போது தீயணைப்பு வாகனம் கூட செல்ல முடியாத அளவில் இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் வழக்குரையில் சொல்லியுள்ளது தவறு என்றும், வாதி ஏற்கனவே அந்த கோவிலின் பூசாரியான செல்வராஜ் என்பவருக்கு ஆதரவாக 3-ம் பிரதிவாதி செயல் அலுவலருக்கு சட்ட அறிவிப்பை அனுப்பியுள்ளார் என்றும், அதனை மனதில் வைத்து கொண்டு வாதி தனது

தனிப்பட்ட ஆதாயத்திற்காகவும், அரசியல் ஆதாயத்திற்காகவும் வேண்டி தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தனது வழக்குரையில் கோரியுள்ள பரிகாரத்தின்படி இந்த 1,2 பிரதிவாதிகள் கட்டப்பட்டுள்ள காம்பவுண்டு சுற்று சுவர் கட்டுமானத்தை இடிப்பதற்கு முடிவெடுக்கும் உரிமை 1,2 பிரதிவாதிகளுக்கு கிடையாது என்றும், அவ்வாறு வாதிக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் திருப்பூர் அவர்களிடம் உரிய மனுவை தாக்கல் செய்து, அந்த மனுவின் மீது இணை ஆணையர் பிறப்பிக்கும் உத்தரவிற்கிணங்க தான் வாதி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கை தாக்கல் செய்ய முடியும் என்றும், ஆனால், வாதி அவ்வாறு எந்தவொரு ஆட்சேபணை மனுவையும் இணை ஆணையரிடம் கொடுக்காமல் நேரடியாக பொய்யான, தவறான சங்கதிகளை கொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை பொறுத்து அசல் வழக்கின் இருதரப்பு விசாரணையின் முடிவில் தான் மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இந்த மனுவில் சொல்லியுள்ளது போல வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உள்ளதா?, இல்லையா? என்றும், அதேபோல், வாதியின் இந்த அசல் வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதா? இல்லையா? என்றும், இந்நீதிமன்றம் தீர்க்கமான முடிவிற்கு வர முடியும். அதேபோல், உரிமையியல் வழக்கை பொறுத்த வரையில், அந்த வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் அந்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஆகும்.

**5.6.** இந்நிலையில், இந்த வழக்கில் வாதி தனது வழக்குரையில் தாவா கோவிலான ஆகாசராயர் கோவிலில் 3-ம் பிரதிவாதியுடன் சேர்ந்து சட்டத்திற்கு புறம்பான வகையில் கோயில் ஆகம விதிகளுக்கு மாறாக 1,2 பிரதிவாதிகள் சுற்று சுவரை கட்டியுள்ளார்கள் என்றும், அந்த சுற்று சுவரானது ஆகாசராயர் கோவிலில் உள்ள 6 மண்டபங்களுக்கு பக்தர்களும், பொது மக்களும் விழாவின் போது சாதாரணமாக செல்ல முடியாத வகையில் கட்டப்பட்டுள்ளது என்றும்,

தேவைப்படும் போது தீயணைப்பு வாகனம் கூட செல்ல முடியாத அளவில் இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும், அந்த திருக்கோவிலில் பக்தர்கள் மற்றும் பொது மக்களின் உரிமைக்காக வேண்டியும், வாதிக்கு அந்த கோவில் குல தெய்வ கோவிலாக இருந்து வழிபட்டு வரும் நிலையிலும் தான் 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து 3-ம் பிரதிவாதி கட்டி வரும் அஸ்திவாரமற்ற, பாதுகாப்பில்லாத மேற்படி கட்டுமானங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றி கொடுக்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கை வாதி தாக்கல் செய்து அதில் வாதி கோரும் செயலுறுத்து கட்டளை பரிகாரத்திற்காக வேண்டி ரூ.3,00,000/-ஐ வழக்கு மதிப்பாக குறிப்பிட்டு, அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 27(C)-ன் படி மதிப்பீடு செய்து ரூ.9,000/- நீதிமன்ற கட்டணமாக வாதி செலுத்தப்பட்டநிலையில் தான் வாதியின் இந்த வழக்கை பரிசீலித்து தான் இந்நீதிமன்றம் அ.வ.எண்.36/2025 வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. அதனால், வாதியின் இந்த வழக்கிற்கு போதுமான வழக்கு மூலம் உள்ளது. இந்த நிலையில், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தங்களது மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள படி வாதியின் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதை பொறுத்தும், இந்த வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்பதை பொறுத்தும் மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் அசல் வழக்கில் எதிர்வழக்குரையாக தாக்கல் செய்து வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆஜர் செய்து தங்களது எதிர்வாத வழக்கை நிரூபித்து கொள்ள சட்ட வழிவகை உள்ளது. அதை தவிர்த்து விட்டு வாதியின் அசல் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், இந்த அசல் வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், அதனால், வாதியின் அசல் வழக்கின் வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11 (d) சிபிசி படியான மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் இந்த மனு சட்ட

ஏற்புடையதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும். அதனால், மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11 (d) சிபிசி படியான இந்த மனுவை தள்ளுபடி செய்வது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் உத்தரவு பகரப்பட்டது.

**ஒம்/–C.செந்தில்குமார்**
**சார்பு நீதிபதி,**
**அவினாசி.**

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:– | இல்லை. |
| <u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:– | இல்லை. |
| <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள்:–</u> | இல்லை. |
| <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u> | இல்லை. |

**ஒம்/–C.செந்தில்குமார்**
**சார்பு நீதிபதி,**
**அவினாசி.**

**சார்பு நீதிமன்றம், அவிநாசி,**
**முன்னிலை: திரு.C.செந்தில்குமார், B.Com.,B,L.,**
**சார்பு நீதிபதி, அவிநாசி.**

2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 17–ஆம் நாள், திங்கள்கிழமை

**இ.நி.ம.எண்.04/2025**
**in**
**அ.வ.எண்.36/2025**

1.ஈஸ்வரன், வயது 64, த/பெ.அவினாசியப்ப கவுண்டர், வசிப்பிடம் கதவு எண்.3/241, அம்மாசைக்காடு தோட்டம், இராயம்பாளையம், அவிநாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.

2.முத்துசாமி, வயது 72, த/பெ.நஞ்சப்ப கவுண்டர், வசிப்பிடம் கதவு எண்.3/401, கொன்னங்காடு தோட்டம், நியூ பவர் ஹவுஸ் அருகில், வேலாயுதம்பாளையம் கிராமம், அவினாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம்.

.. மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

//எதிர்//

சத்தியமூர்த்தி, வயது 36, த/பெ.லேட்.தங்கவேலு, வசிப்பிடம் கதவு எண்.1/507, ராயன் கோவில் காலனி, வேலாயுதம்பாளையம் கிராமம், அவினாசி தாலூக்கா, திருப்பூர் மாவட்டம். .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் அ.வ.எண்.36/2025 வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி அன்டர் ஆர்டர் 7 ரூல் 11(a) மற்றும் 11(d) சிபிசி–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள்:–** 28.04.2025

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 12.01.2026–ஆம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில்

வழக்கறிஞர் **திரு.E.P.இளவரசு** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.P.விஜய ஆனந்தன்** அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவாணை**

1. **மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளின் இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.**
2. **செலவுத்தொகை இல்லை**

2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள், எனது கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்/–C.செந்தில்குமார்,**
**சார்பு நீதிபதி,**
**அவினாசி.**